பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

10 06 2026 06 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியாவின் பிரதமராக அதிக நாட்கள் பதவி வகித்தவர் என்ற சாதனையை பிரதமர் திரு. நரேந்திர மோடி படைத்துள்ளார்.

2. மத்திய பிஜேபி அரசு பதவியேற்று 12 ஆண்டுகள் நிறைவடைந்திருப்பதை ஒட்டியும், பிரதமரின் சாதனையை கொண்டாடும் வகையிலும் தேசிய ஜனநாயக கூட்டணித் தலைவர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

3. முதலமைச்சர் திரு. விஜய் தொடங்கி வைத்த சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினர் மாநிலம் முழுவதும் இன்று முதல் பணியில் ஈடுபட உள்ளனர்.

4. தமிழகத்தில் இன்று முதல் வரும் 14ஆம் தேதி வரை மிதமான மழை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. அயர்லாந்து, இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் முகமது சிராஜுக்கு பதிலாக பிரசித் கிருஷ்ணா சேர்க்கப்பட்டுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியாவின் பிரதமராக அதிக நாட்கள் பதவி வகித்தவர் என்ற சாதனையை பிரதமர் திரு. நரேந்திர மோடி படைத்துள்ளார்.

கடந்த **2014**ஆம் ஆண்டு மே மாதம் **26**ஆம் தேதி, முதல் முறையாக திரு. நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்றார்.

இந்திய வரலாற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக அவர் **4** ஆயிரத்து **399** நாட்களாக பதவியில் நீடிக்கிறார்.

மறைந்த பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு, கடந்த **1952**ஆம் ஆண்டு மே மாதம் **13**ஆம் தேதி முதல் **1964**ஆம் ஆண்டு மே மாதம் **27**ஆம் தேதி வரை பிரதமராக பதவி வகித்தார்.

அவர் **4** ஆயிரத்து **398** நாட்கள் பிரதமர் பதவியில் இருந்தார்.

தற்போது பிரதமர் திரு. நரேந்திர மோடி நேருவின் சாதனையை முறியடித்துள்ளார்.

மத்திய அரசு **12** ஆண்டுகளை நிறைவு செய்திருப்பது மற்றும் திரு. நரேந்திர மோடி அதிக நாட்கள் பிரதமராக பதவியில் தொடர்வதை பாராட்டும் வகையில் தேசிய ஜனநாயக கூட்டணிக்

கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் அனைத்துக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் முதலமைச்சர்கள், துணை முதல்வர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்கிறார்கள்.

தேசிய அளவிலான வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும், வரும் 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் மத்திய அரசின் தொலைநோக்குப் பார்வை குறித்தும் இன்றைய கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

முதலமைச்சர் திரு. விஜய் நேற்று தொடங்கி வைத்த சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினர் மாநிலம் முழுவதும் இன்று பணியில் ஈடுபட உள்ளனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்காக முதற்கட்டமாக 354 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுவதாகவும், புதிதாக 2 ஆயிரத்து 500 பணியிடங்கள் உருவாக்கப்படும் என்றும் முதலமைச்சர் திரு. விஜய் தமது உரையில் குறிப்பிட்டார்.

இந்த சிறப்புப் படை பெண்களுக்கு எதிரான குற்றங்களை முன்கூட்டியே தடுப்பதுடன் ட்ரோன் வாயிலாக கண்காணிப்பு பணியிலும் ஈடுபடும் என்று அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை தொடங்கப்பட்டிருப்பதை வரவேற்பதாக மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் திரு. கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், இந்த திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அறிவிப்புகள் செயல்பாட்டுக்கு வந்து, ஒவ்வொரு பெண்ணுக்கும் அரணாக அமையும் என்று தாம் நம்புவதாக திரு. கமல்ஹாசன் அதில் கூறியுள்ளார்.

<<<<>>>>

மத்திய அரசின் முத்ரா வங்கிக் கடன் திட்டத்தின் மூலம் சிறு, குறு தொழில் நிறுவனங்கள் பயனடைந்து வருகின்றன.

வேலூர் மாவட்டத்தில் இந்த கடன் திட்டம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை **41** ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு சுமார் **492** கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட முன்னோடி வங்கி பொதுமேலாளர் திருமதி லில்லிபாய் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**(Voice Byte — Lillyboy — 31 Sec)**

இந்த திட்டத்தின் மூலம் தனது தொழிலை மேம்படுத்த முடிந்ததாக பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

**(Voice Byte — Beneficiary — 24 Sec)**

<<<<>>>>

தமிழகத்தில் இன்று முதல் வரும் 14ஆம் தேதி வரை மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்னிந்திய பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக திருநெல்வேலி, கோவை மாவட்ட மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒருசில இடங்களில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

வெப்பநிலையைப் பொறுத்தவரை தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் இயல்பைவிட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகமாக பதிவாகும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே கேரளத்தில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால் தென்காசி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte — Senthil — 34 Sec)

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஓமன் கடற்பகுதியில் அமெரிக்க ராணுவ ஹெலிகாப்டரை ஈரான் சுட்டு வீழ்த்தியதாக அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

-------------

இந்தியாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர்களில் அதிக நாட்கள் பதவி வகித்து சாதனை படைத்துள்ள திரு. நரேந்திர மோடிக்கு உலக நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

-------------

நீட் மறு தேர்வு வரும் 21ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் தில்லியில் உள்ள தேசிய தேர்வு முகமை அலுவலகத்தை மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

-------------

ஜம்மு-கஷ்மீரின் பாரமுல்லா மாவட்டம் யுரி பகுதியில் கையெறி குண்டு வெடித்ததில் ராணுவ வீரர்கள் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

-------------

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் அருகே அனுமதியின்றி செயல்பட்ட பட்டாசு கிடங்கில் நேரிட்ட வெடிவிபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

-------------

கடலூர் அண்ணா பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கான வசதிகள், வணிக வளாகங்கள் ஆகியவற்றை மாநில வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. ராஜ்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

-------------

மதுரை மாவட்டத்தில் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற அனைவரும் உயர்கல்வியில் சேர்வதை உறுதி செய்ய, மாவட்ட கட்டுப்பாட்டு அறை மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் திரு. ஆகாஷ் கேட்டறிந்தார்.

-------------

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சியர் திரு. மணீஷ் நாரணவரே ஆய்வு மேற்கொண்டு நோயாளிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

-------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்ட **18** வாகனங்கள், **5** லட்சத்து **35** ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது.

-------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்புக் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி சினேகா மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

அயர்லாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் முகமது சிராஜுக்கு பதிலாக பிரசித் கிருஷ்ணா சேர்க்கப்பட்டுள்ளார்.

அணி நிர்வாகம் மற்றும் மருத்துவ அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் சிராஜுக்கு ஓய்வளிக்கப்பட்டிருப்பதாக **BCCI** தெரிவித்துள்ளது.

வரும் **13**ஆம் தேதி தொடங்கவுள்ள ஆஃப்கனிஸ்தானுக்கு எதிரான **3** போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் பிரசித் கிருஷ்ணா இடம்பெற்றுள்ளார்.

-------------

**13** வயதுக்குட்பட்டோருக்கான டென்னிஸ் வீரர்கள் தரவரிசைப் பட்டியலில் பெங்களூருவைச் சேர்ந்த **Srishti Kiran** முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

சர்வதேச ஜூனியர் போட்டிகளில் **5** பட்டங்களை வென்றதுடன் உலக டென்னிஸ் ஜூனியர் போட்டியில் இரண்டாம் இடத்தை அவர் பிடித்தார்.

**<<<<The End>>>>**